பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 15 திங்கட்கிழமை (29.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 65

# சர்வதேச சமூகத்தின் மென்போக்கு நிலைப்பாடு அரசின் அதிகாரத்தனத்துக்கு துணைபோகிறது

## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, ஜனவரி 29

சர்வதேச சமூகம் தன்னிடமுள்ள பலமான சக்தியை உத்வேகத்தோடு பயன்படுத்தாமல் மென்போக்கு நிலையைக் கடைப்பிடித்ததாலேயே இலங்கை அரசாங்கம் அதிகாரத்தனத்துடன் ஆக்கிரமிப்பு இராணுவத் திட்டங்களை நிறைவேற்றுகிறது.

இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சர்வதேசசமூகம் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொண்டாலும், உருப்படியில்லாத செயற்பாட்டையே கடைப்பிடிக்கிறது. -

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்று சர்வதேச சமூகம் கூறுகிறது. ஆனால் அரசாங்கத்தின் தற்போதைய இராணுவப் பாதையிலிருந்து திசைமாற்றுவதற்கு தனக்குள்ள பலத்தை பயன்படுத்துவதற்கு விருப்பமற்றுள்ளது அல்லது இயலாத்தன்மையில் உள்ளது. விடுதலைப் புலிகள் தமது பொறுமையை கடைப்பிடித்து வருகின்ற போதிலும் சர்வதேச சமூகம் உரிய பொறுப்புடன் செயலாற்றுவதாக இல்லை. - என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் 'தமிழ்நெற்' இணையத் தளத்துக்கு நேற்று வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செவ்வியின் சாராம்சம் வருமாறு:-

பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டால் மட்டுமே அரசியல்

(04ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி சேவை நேற்று குடாநாட்டில் தடைப்பட்டது

### 7 ஆயிரம் இணைப்புகள் 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜன.29

குடாநாடு மற்றும் வன்னியில் இயங்கும் 'ரெலிகொம்' நிறுவனத்தின் 9000 தொலைபேசி இணைப்புகளில் 7000 இணைப்புக்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் செயல் இழந்துள்ளன. அந்நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 10.35 தொடக்கம் ரெலிகொம் நிறுவனத்தின் சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டன. இந்தப் பாதிப்புக்கான காரணத்தை உடன் நேற்றிரவு வரை முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை என்று ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இந்தத் தடங்கல் தொடர்பாக 'ரெலிகொம்' நிறுவன அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாட விருப்பதாக அந்நிறுவனத்தின் பொது முகாமையாளர் என்.சரவணபவ நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

அதேவேளை -

குடாநாட்டில் நேற்று 2 இலக்கத் தொடர் தொலைபேசிகளும், 3 இலக்கத் தொடர் தொலைபேசிகளும் மட்டுமே

(04ஆம் பக்கம் பார்க்க)

★ அமைச்சரவை அந்தஸ்துடன் - 52 பேர் ★ அமைச்சரவை அந்தஸ்து இன்றி - 33 பேர்
★ பிரதி அமைச்சர்கள் - 19 பேர்

## 104 அமைச்சர்கள் பதவியேற்பு

## ஜே.வி.பி. ஆதரவு இன்றி நாடாளுமன்றில் அரசின் பலம் 112 ஆக நேற்று உயர்ந்தது

கொழும்பு, ஜனவரி 29

அமைச்சரவை அந்தஸ்துள்ள 52 அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் 33 பேர், பிரதி அமைச்சர்கள் 19 பேர்தான மொத்தம் 104 பேர் புதிய அமைச் சர்களாகப் பதவியேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவிய 19 எம்.பிக்கள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஆகியோரின் ஆதரவுடன் நாடாளுமன்றில் அரசின் பலம் - ஜே.வி.பி. ஆதரவின்றியே அறுதிப் பெரும்பான்மையான 113 ஆசனங்கள் என்ற எண்ணிக்கையை நெருங்கியது. இப்போது அரசுத் தரப்பில் 112 எம்.பிக்கள் உள்ளனர்.

ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய விரைவில் அரசில் இணையும் எனக் கூறப்படும் பின்னணியில் அரசின் பலம் விரைவில் 121 ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சேர்த்து 53 உறுப்பினர்களைக் கொண்டதாகப் புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது.

புதிய அமைச்சர்கள் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மொத்தம் 52 புதிய அமைச்சர்களில் அமரசிறி தொடங்கொட தவிர ஏனைய 51 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

இவர்களைத் தொடர்ந்து அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக 33 பேரும் பிரதி அமைச்சர்களாகப் 15 பேரும் நேற்றுப் பதவியேற்றனர்.

இந்த 104 பேரையும் தவிர இன்னும் 8 எம்.பிக்கள் அமைச்சுப் பதவி ஏற்காமல் அரசுத் தரப்பில் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.கவிலிருந்து அரசுப் பக்கம் சாய்ந்த ரஞ்சித் பத்துமபண்டார, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த விஜயதாஸ ராஜபக்ஷ, அர்ஜுனா ரணதுங்க, நிருபமா ராஜபக்ஷ, இ.தொ.காவைச் சேர்ந்த புத்திரசிகாமணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த

(04ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிஸை தேடுதலில் 18 தமிழர்கள் கைது

கொழும்பு, ஜன.29

கல்கிஸை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 11 பெண்கள் உட்பட 18 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸை பொலீஸ் அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுக்காலை வரை இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. தங்களை உறுதிப்படுத்தவதற்கான ஆவணங்கள் எதனையும் பொலீஸாரிடம் சமர்ப்பிக்கத் தவறியமையால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஊரடங்கை மீறியதாகக் கைதான ஏழு பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.29

ஊரடங்குச் சட்டத்தை மீறியதாக நேற்று முன்தினம் இரவு கைதான ஏழு நபர்களை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதி வான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஊரடங்கு நேரத்தில் வீதியில் நடமாடியதாகப் படையினரால் கொட்டடி, ஆஸ்பத்திரி வீதி, நல்லூர் பண்டாரக்குளம், நாவாந்துறை ஆகிய இடங்களில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## கொள்ளையர்களைக் கைது செய்ய பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை

கொழும்புத்துறையில் பூசகர் ஒருவரின் வீட்டில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கொள்ளையர்களைக் கைதுசெய்த படையினர் மேலும் பலரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் சரளமாக சிங்கள மொழியில் பேசி பாதுகாப்புப் படையினர் கொள்ளைகளில் ஈடுபடுவதாக மக்களுக்கு உணர்த்த முற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதுபோன்று மேலும் குழுக்கள் இருப்பதாக அவர்கள் கொடுத்த தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அவர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட குழுக்கள் குறித்து தகவல் தெரிந்திருப்பின் பாதுகாப்புத் தரப்புக்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அரசுடன் செய்த புரிந்துணர்வு ஒப்பந்த ஆவணத்தை நேற்று சீற்றத்துடன் கிழித்து வீசியது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜன.29

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அணியினர் நேற்று அரசுத்தரப்பில் போய் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து - அந்தக் கட்சி தாவும் படலத்தால் சீற்றமடைந்த ஐக்கிய தேசியக் கட்சி, முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தான் செய்துகொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் கூட்டப்பட்ட ஒரு விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் - ஊடகவியலாளர்கள் மத்தியில் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆவணம் துண்டு துண்டாகக் கிழித்து வீசப்பட்டது.

ஐ.தே.கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனாநாயக்க ஒப்பந்த ஆவணத்தைக் கிழித்து வீசியதோடு அரசிற்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையில் இருந்த அனைத்துத் தொடர்புகளும் இத்தோடு துண்டிக்கப்படுகின்றன என்று அறிவித்தார்.

இது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கூட்டப்பட்டது. இச்சந்திப்பின்போதே இந்த ஒப்பந்தப் பத்திரம் கிழித்து வீசப்பட்டது.

இச்சந்திப்பின்போது ருக்மன் சேனாநாயக்க ஊடகவியலாளர்களுக்கு உரையாற்றுகையில், நாட்டின் நிலையான சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் அரசுக்கு ஆதரவு வழங்குவதற்காக நாம் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தும் சதித்திட்டத்தில் அரசு ஈடுபட்டால் இந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படும் என அரசிற்கு அப்போது அறிவித்திருந்தோம்.


ஒப்பந்தத்தின் எட்டாம் பிரிவின்படி கட்சியைப் பலவீனப்படுத்தும் வகையில் கட்சி உறுப்பினர்களைத் தம் பக்கம் வளைத்து

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**

தாயின் மடியில் 19.07.1959 — ஆண்டவன் அடியில் 25.01.2002


திதி : 29.01.2007

எமக்கு வழிகாட்டியாய் இருந்த
எம் அன்பின் அண்ணாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது - ஆனால்
உங்கள் நினைவுகளால் என்றும் தவிக்கிறோம்.

சந்தை வீதி,
சுன்னாகம். (57588)

தகவல்:
குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**திருச்செல்வம் சுரேந்திரன்**
(சுரேன்)

மண்ணில் 08.05.1968 — விண்ணில் 01.11.2006

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது.
*சங்கீதம் 116.15*

அப்பா நீங்கள் இல்லாத உலகில்
நிம்மதி இன்றித் தவிக்கிறோம்.

12/15, கெனடி வீதி, நாவாந்துறை.

பிள்ளைகள்:
சு.சுவிற்ரி, சு.சுஜான்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**றோசலீன் நல்லான்**

மலர்வு 22.04.1932 — உதிர்வு 29.01.2006

அன்பின் திரு நவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் எமக்கெல்லாம்
நல்வாழ்வைக் காட்டி வளர்த்து
ஆளாக்கிய தாயே!

ஆண்டுகள் ஒன்றான போதும் ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் எம்மை விட்டு அகலாது.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (29.01.2007) திங்கட்கிழமை மு.ப. 10மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அன்னாருக்காக பிரார்த்திக்கும்படி வேண்டிக்கொள்வதுடன், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர். (57473)

## தீயுடன் சங்கமித்து வருடங்கள் மூன்றில்..

அன்னையின் மடியில்
30
10
1975



ஆண்டவன் அடியில்
17
01
2004

அமரர் **சின்னத்துரை ரஜனன்**

திதி : ஏகதாசி (29.01.2007)

தீயுடன் சங்கமித்து ஓடின வருடங்கள் மூன்று
தீங்கிழைக்கா உன்னையும்
தீண்டியதோ அக்கினி அன்று!
தினம் தினம் உனை நினைந்து
திணறுகின்றனர் பெற்றவர்கள் இங்கே
திரை கடலுக்கு அப்பால் இருந்து
தேம்புகின்றனர் உடன் பிறப்புகள் அங்கே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்கா நினைவுகளுடன்:
பெற்றோர் : திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை ,
சகோதரர்கள்: ரமணன் குடும்பம் (கனடா),
ரமணி குடும்பம் ([illegible]),
ரஜனி குடும்பம் (கனடா)

"லோகஸ்தான்",
பிரதான வீதி,
சுன்னாகம்.

(57472)


### விற்பனைக்கு

போட்டோக் கொப்பி எடுக்கும் மெசின் Sharp விற்பனைக்குண்டு.
தொடர்பு:
மணியம் ஸ்ரோர்ஸ்,
சாவகச்சேரி.

### வாடகைக்கு வீடு

நான்கு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
அமைவிடம்: கொக்குவில் சம்பியன் வீதியை அண்டிய பகுதி யாழ். பல்கலைக்கழகத்திற்கு 1½ கி.மீ. தொலைவு. அமைதியான சூழல்.
தொடர்பு: சி.இராமச்சந்திரா
தொ.பே. 021 222 3837

### வீடு வாடகைக்கு

42/7, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
சி.சரஸ்வதி.


## துயர் பகிர்வு

24.01.2007 அன்று சிவபதமடைந்த
அமரர் **இளையகுட்டி ஜெகதீசன்**
[கல்விமாணி - இடைநிலை, கணிதப்பிரிவு]



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரோடு துயரை பகிர்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்
கல்விமாணி -2ஆம் வருடம்,
தேசிய கல்வி நிறுவகம் - யாழ். பிராந்தியம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி தயாநிதி பாஸ்கரன்
அவர்களின் அன்புத் தாய்
அமரர் **சின்னையா பகவதி**
அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்கேற்கும் அதேவேளை, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

யா/ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலய
சமூகம்.


### தவறிவிட்டது

கிறிஸ்ரி பிரேம்குமார் ஆகிய எனது அடையாள அட்டை (இல.590080659V) காணாமற் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் 141, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். அல்லது தொலைபேசி 0773628183 உடன் தொடர்பு கொள்ளவும்.

### மணமகள் தேவை

1979 ஆம் ஆண்டு, நட்சத்திரம் ஆயிலியம் முதலாம் பாதத்தில் பிறந்த, சிகபாவம் - 40, உயரம் 5½அடி உள்ள யாழ்.இந்து கோவில் குடும்பத்தைச் சேர்ந்த ஐரோப்பிய நாட்டில் நிரந்தர பிரஜாவுரிமை பெற்ற அழகான மணமகனுக்கு A/L படித்த, அழகிய மணமகள் தேவை.
தொடர்பு :
T.P : 0776745863
0779361564

### Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna, Sri Lanka.

Apply for the following courses immediately.

**Computer Certificate Courses**

- Visual Basic
- C++ Programming *Duration : 3 - 4 months (Part time)*

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-

T.P :0602213139/
021 2228275.
E.mail : jcit@sltnet.lk

Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai. (c/51734)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தையா இலங்கைராசா**

தோற்றம் 25.03.1932 — மறைவு 09.02.2006

உண்மை அன்பு நேர்மை இறைபக்தியுடன்
வாழ்ந்து வழி நடத்தி வாழவைத்த எங்கள் தெய்வம்
கருத்துடன் பேணிக் காத்த காவல் தெய்வம்
எம்மையெல்லாம் மீளாத் துயரில் விட்டுச் சென்று விட்டீர்கள்
எந்நாளும் உங்கள் நினைவால் வாடுகிறோம்

பிரிவால் துயருறும்.
- குடும்பத்தினர்.

நி.மு: கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (57487)

த.மு:38/2A, SHRUBBERY GARDEN,
BAMBALAPITIYA, COLOMBO - 4

## 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **P.M.இராசரத்தினம்**
(ஓய்வுபெற்ற காணியதிகாரரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும்)

தோற்றம் 04.05.1915 — மறைவு 17.01.1992

திதி : பூர்வபக்க துவாதசி

"இறப்பை, காலத்தை தள்ளிவைக்க முடியாது
இந்த உண்மை தெரியாத மனிதன், பணம்,சொத்து,
சேர்ப்பதில் குறியாக இருக்கிறான். இறப்பு வரும்போது
அதை எதிர்கொள்ளப் பயப்படுகிறான்.
அவன் அதற்குத் தயாராக இல்லை"
- ஸ்ரீ சத்திய சாயி பாபா.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (57595)

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்,
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் இலட்சுமி



நீர்வேலி வடக்கு, மாசிவனைப் பிறப்பிடமாகவும் முதலியார் லேன், கச்சேரி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இலட்சுமி 25.01.2007 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம் (இ.போ.ச), மங்கையர்க்கரசி, மகேந்திரராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் நாகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராசமணி (வலி.கிழக்குப் பிரதேச சபை, கோப்பாய்), இன்பரத்தினம் (கொழும்பு), வாமதேவன் (சுவிஸ்)ஆகியோரின் பாசமிகு மாமியும் தேவராசா அஜிதா (லண்டன்), மதன் விஜிதா, அஜித் ராஜேஸ்வரி, தினேஸ், திலீபன் கார்த்திகா, விசே[illegible]தினி, அனிசா, சாந்தி, சிந்துஜா, சஞ்சீவன், வாணி ஆகியோரின் பேர்த்தியும் அபிசன், அனோஜன், விதுசன், திவ்வியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2007) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சித்துப்பாத்தி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/1, முதலியார் லேன்,
கச்சேரி, நல்லூர். (57586)

தகவல்:
சபாரத்தினம் (கணவர்).

### திருமதி சுந்தரமூர்த்தி தையல்நாயகி



இயாமாவளவு, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சுந்தரமூர்த்தி தையல்நாயகி 27.01.2007 அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி (முன்னாள் ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனக் கல்லூரி) அவர்களின் பிரியபத்தினி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் சனிக்கிழமை 27.01.2007 அவரது இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இயாமா வளவு,
தெல்லிப்பழை. (57593)

தகவல்:
சுந்தரமூர்த்தி (ஆசிரியர்).


### M.A., M.com., M.B.A., M.Sc, M.Phil
### காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை)

- பல்கலைக்கழகத்தினால் பட்ட நெறிகளுக்கு பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- M.A. இல் அரசியல் விஞ்ஞானம், வரலாறு, தமிழ், சமூகவியல், பொதுநிர்வாகம், ஆங்கில இலக்கியம், சமயமும் தத்துவமும், பொருளியல் ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
- PG DIPLOMA (ONE YEAR) கற்கை நெறிக்கும் பின்வரும் பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். MANAGEMENT, MARKETING MANAGEMENT, HOSPITAL MANAGEMENT, SCHOOL ADMINISTRATION, NGO MANAGEMENT, ENTREPRENEUR SHIP DEVELOPMENT, JOURNALISM AND MASS COMMUNICATION, PUBLIC RELATIONS MANAGEMENT, COMPUTER APPLICATION, LABOUR AND ADMINISTIVE LAW.
- A/L உடன் SAIVA SIDDHANTA, LIBRARY INFORMATION SCIENCE.
- M.Phil (ONE year) கற்கை நெறிக்கு HISTORY, POLITICAL SCIENCE, PUBLIC ADMINISTRATION, ECONOMICS, LABOUR STUDIES, TAMIL, ENGLISH EDUCATION, JOURNALISM AND MASS COMMUNICATION, COMMERCE, ENTREPRENEAR SHIP, MATHEMATICS, SOCIOLOGY, COMPUTER SCIENCE, TOURISM MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
- பரீட்சைகள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

யாழ் இணைப்பாளர்.
T.P : [illegible]
[illegible] (57498)

புதிய உயர் கல்லூரி,
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## அரசியல் குத்துக்கரணங்களால் நேரப்போகும் ஆபத்துக்கள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பருத்து - உப்பி - ஊதிப்பெருத்த இராட்சத அமைச்சரவை பதவியேற்றுவிட்டது.

'போரும் சமாதானமும்' என்ற இரட்டைவேட அணுகுமுறையோடு நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைக் கையாண்டுவரும் மஹிந்தரின் அரசின் போக்கில், இப்போது இடம்பெற்றிருக்கும் அரசியல் குத்துக்கரணங்கள் என்ன மாற்றத்தைக் கொண்டு வரப்போகின்றன என்பதுதான் தமிழர் தரப்பின் அங்கலாய்ப்பாக இருக்கின்றது.

கூண்டோடு இடம்பெற்ற அரசியல் குத்துக்கரணங்கள், அணி மாற்றங்கள், அதிரடிப் பாய்ச்சல்கள் காரணமாக நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொடர்பான அட்சரகணிதத்தில் தனது நிலையை ஸ்திரப்படுத்தி, வலுப்படுத்தியுள்ள இந்த அரசு இனி எந்த வழியை நாடப்போகின்றது?

பௌத்த சிங்களப் பேரினவாதத்திலும் மேலாதிக்க மமதையிலும் மூழ்கி, இனவாதத்தில் ஊறித் திளைத்த ஜே.வி.பியோடு இதுவரை கைகோர்த்து நின்றது மஹிந்தரின் அரசு. அதனால் முழுப் பேரினவாத மேலாண்மைப் போக்கோடும் சிறுபான்மையினரின் பிரச்சினையை முழு அதிகாரத் திமிரோடும் இந்த அரசு அணுகியது. தனது ஆட்சிக் கூட்டாளியான ஜே.வி.பி. தீவிரப் போக்காளர்களைத் தாஜா செய்து, சமாளித்துப் போவதற்காக அந்தப் பாதையில் அது சென்றிருக்கலாம். இப்போது, பிரதான எதிரணிக்கட்சியான ஐ.தே.கவைப் பிளந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான அதிருப்தியாளர்களை அரசுத் தலைமை தன்பக்கம் சேர்த்துக்கொண்டுவிட்டதால், ஜே.வி.பியும் இதுவரை அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்குகின்றது. ஜே.வி.பி. பிரிந்துசெல்வதால் அந்த அரசு இனிமேல் சிறுபான்மையினர் விடயத்தை பேரினவாதத் திமிரோடு அணுகாமல் பரிவோடு பரிசீலிக்கும் அத்தகைய சமரசப் போக்குடையவர்கள் பலர் ஐ.தே.கவிலிருந்து பிரிந்து இப்போது ஆளும் தரப்புக்கு வந்திருப்பதால் அத்தகைய சிந்தனைப் போக்குடையோரின் கைகள் ஆளுந் தரப்புக்குள் ஓங்கும். அதனால் ஆளும் தரப்பு இதுவரை தான் காட்டிவந்த - வலிந்து இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கும் - போர்த் தீவிரப்போக்கைக் கைவிட்டு, அமைதி வழித்தீர்வுக்கு இடமளிக்கக்கூடிய மிதவாதப் போக்கை நாடிச்செல்லும் - என்றெல்லாம் பலரும் கருதக்கூடும்.

ஆனால், அது நடக்காது என்பதே உண்மை நிலை.

தெற்கில் இப்போது இடம்பெற்றுள்ள மிகக் கேவலமான அரசியல் குத்துக்கரணத்தின் - 'அந்தர் பல்டி' யின் - பெறுபேறு மிக மோசமான நெருக்கடி நிலைக்கு - அதுவும் அரசியல் ரீதியாக மட்டுமன்றி இராணுவ ரீதியாகவும் இக்கட்டான சூழலுக்கு - நாட்டை இட்டுச் செல்லப்போகின்றது என்பதே அச்சத்துக்குரிய நிலைவரமாகும்.

சிங்கள, பௌத்த இனவாதத் திமிருடைய ஜே.வி.பி. போன்ற கட்சிகளை வளைத்துத் தனது அணியின் பக்கம் வைத்திருப்பதற்காகத்தான் அந்தப் போக்கை மஹிந்தரின் அரசு இவ்வளவு காலமும் நாடியது என்று யாரும் கருதினால் அது முற்றிலும் தவறானது.

மஹிந்த ராஜபக்ஷவின் இலக்கும் நோக்கும் ஜே.வி.பியைத் திருப்திப்படுத்துவது அல்ல. ஜே.வி.பியின் சிந்தனைப் பாணியில் ஊறியுள்ள தென்னிலங்கைத் தீவிரப் போக்காளர்களைத் திருப்திப்படுத்தி, அவர்களைத் தன் பின்னால் அணி திரளவைத்து அந்த வாக்கு வங்கியை அரசியலில் தனது நிரந்தர முதலாகவும் பலமாகவும் ஆக்கிக்கொள்வதுதான். அதற்காக ஜே.வி.பியைவிட இன்னும் பேரினவாதத் தீவிரப் போக்கும், தமிழ்த்தேசியத்தின் எழுச்சியை எந்த வழியிலும் நசுக்கும் மேலாண்மை வெறியும் தனது அரசிடம்தான் அதிகம் உள்ளன என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அரசின் செயற்பாடுகள் இனிமேல் அமையும் என்பதே யதார்த்தம்.

பேரினவாதத்தின் ஒருமுகமாகத் திகழும் பௌத்த மத அடிப்படைவாதிகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமய இன்னும் மஹிந்தரின் அணியில்தான் இருக்கின்றது. ஜே.வி.பியை விட இனவாதத்தில் தாங்கள் முற்றியவர்கள் - மூத்தவர்கள் - என்று வெளிப்படுத்துவதன் மூலம் தென்னிலங்கை வாக்கு வங்கியைத் தக்கவைக்கத் துடியாய் துடிக்கும் இக்கட்சி, இதே நோக்கத்துக்காக மஹிந்தரின் அரசையும் இந்த வழியிலேயே வழிப்படுத்த உள்ளிருந்து அழுத்தம் கொடுக்கும் என்பது நிச்சயம்.

மறுபுறத்தில் இதுவரை அமைதி முயற்சிகளுக்கு எதிரணியில் இருந்தபடி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வந்த பிரதான எதிர்க்கட்சியை உடைத்து அதனைக் குட்டிச் சுவராக்கியிருக்கின்றார் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ.

இதனால் அமைதி முயற்சிகளை ஒன்றுபட்டு அணுகுவதற்கு ஆளும் தரப்புக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டாயிற்று. இது சமாதான முயற்சிகளை முன்னெடுக்க சாதகமாக இருந்த சூழ்நிலைக்கு விழுந்த பேரிடியாகும்.

தேசிய இனப்பிரச்சினையில் சிறுபான்மையினருக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்ற நியாயப் போக்கோடும், தாராள எண்ணத்தோடும் தாம் செயற்பட்டதாலேயே தென்னிலங்கை வாக்காளர்களினால் ஒதுக்கப்பட்டு, தென்னிலங்கைத் தீவிரப் போக்காளர்களின் முழு ஆதரவோடு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய அதிபர் மஹிந்தவினால் தங்கள் கட்சி ரீதியாக உடைத்து சின்னாபின்னமாக்கப்பட்டு, பிய்த்து உதறப்பட்டுள்ளோம் என்ற சிந்தனை ஐ.தே.கட்சியின் எஞ்சியுள்ள தலைவர்களுக்கு ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது. எப்படியும் ஆட்சிக்கு வரவேண்டும், அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற இலக்கில், வேறுவழியின்றி - தென்னிலங்கைத் தீவிரப்போக்கை - மீண்டும் தங்களுடையதாகவும் சுவீகரித்துக்கொண்டு, அந்தப் பாதையில் பயணிக்கவேண்டிய அரசியல் கட்டாயம் அவர்களுக்கு நேரும். ஆகவே உடைந்து, பிய்ந்துமிஞ்சியுள்ள ஐ.தே.கட்சியையும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பாணியில் இனவாத அரசியலை முற்றாகக் கையேற்கும் நிலைக்குத் தள்ளியுள்ளன தற்போதைய அரசியல் குத்துக்கரணங்கள்.

அரசியல் நிலைமை இதுவென்றால் இராணுவக்கள நிலைமையும் அதுதான். நாடாளுமன்றத்தில் தனது பலத்தை ஸ்திரப்படுத்தியுள்ள மஹிந்தரின் அரசு, தென்னிலங்கை தீவிரப்போக்காளர்களை அடிப்படை இலக்காகக் கொண்ட தனது வாக்கு வங்கியை ஸ்திரப்படுத்துவதற்கு தமிழர்தரப்பு மீதான இராணுவ வலோற்கார நகர்வுகளை முழு அளவில் முன்னெடுக்க முயலும். இராணுவக் களவெற்றிகளை அரசியல் ஆதாயமாகப் பயன்படுத்தி, ஜே.வி.பியை விட பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதில் உறுதியானது தமது அரசு என்று காட்டுவதற்கு அது முயலும். அதற்காக அமைதி முயற்சிகளை மேலும் ஓரங்கட்டிவிட்டு இராணுவ முனைப்பில் அது அதிக தீவிரம் காட்டும்.

எப்படிப் பார்த்தாலும் தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் குத்துக்கரணங்கள் அதிபர் மஹிந்தரின் கையைப் பலப்படுத்தினாலும் மறுபுறத்தில் நாட்டைப் பெரும் சிக்கலுக்குள் ஆழ்த்தப்போகின்றன என்பது திண்ணம்.

## விசுவமடுவில் தவறுதலான வெடி விபத்து 9 பேர் மரணம் என்று புலிகள் அறிவிப்பு

விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் உதவிப் படை வீரர்கள் ஒன்பது பேர் மரணமானார்கள் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சின்னப்பா தவராசா - யாழ். மாவட்டம், மகேந்திரன் ரஜீவன் - விசுவமடு, துரைசாமி தவராசா - யாழ்.மாவட்டம், செல்லத்துரை பிரமானந்தம்(யாழ். மாவட்டம்), தம்பிராசா அருணோதயன் (யாழ்.மாவட்டம்), செபமாலை மரிஸ்காந்தன்(இறக்கக் கண்டி, கிராஞ்சி), சபாரத்தினம் ரஜீந்திரன்(யாழ்.மாவட்டம்), யோகரத்தினம் நிசாந்தன்(கிளிநொச்சி), சிவஞானம் விஜிதரன்(கிராஞ்சி) ஆகியோரே மரணமான வர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

விசுவமடுவில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் லெப். கேணல் மலரவன் (நவரத்தினராசா - சுரேஸ்குமார் - யாழ். மாவட்டம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார் என்றும் விடு தலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## யாழ்., நல்லூர் பகுதிகளுக்கு விழிப்புக்குழுக்கள்; செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் விழிப்புக் குழுக்களை உடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேலதிக அரச அதிபர் வி.சிவசாமி, யாழ்., நல்லூர் பிரதேச செயலர்கள், இரண்டு பிரதேச செயலகங்களையும் சேர்ந்த கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு, விழிப்புக் குழுக்கள் அமைப்பது தொடர்பான விளக்கங்களை வழங்கினார்.

விழிப்புக் குழுக்களில் நியமிக்கப்படவுள்ள உறுப்பினர் விவரங்களை இன்று மாலைக்குள் சமர்ப்பிக்கும்படி கிராம சேவையாளர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது. (அ-1)

## வெளிவிவகாரத்தை இழந்தார் மங்கள!

கொழும்பு,ஜன.29

அதிரடி அமைச்சரவை மாற்றத்தில் முக்கிய அமைச்சுக்களை இழந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர்.

ஒருவர் - அமைச்சர் மங்கள சமரவீர. அண்மைக் காலத்தில் ஜனாதிபதியுடன் முரண்பட்டு நின்ற மங்கள சமரவீரவிடமிருந்து வெளிவிவகாரம் பறிக்கப்பட்டுள்ளது.

மற்றவர் - அனுரா பண்டாரநாயக்க. உல்லாசப் பயணத்துறை அவரிடமிருந்து பறிக்கப்பட்டு, வெறும் தேசிய மரபுரிமை அமைச்சராக பெயருக்கு நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை, இதுவரை காலமும் பிரதி அமைச்சராக இருந்த மலையக மக்கள் முன்னணியின் இராதாகிருஷ்ணன், அண்மைக் காலத்தில் தமிழர்களுக்கு எதிரான கைதுகள், சித்திரவதைகள், கொடூரங்கள் போன்றவை குறித்துக் குரல் எழுப்பியமைக்காக அமைச்சுப் பதவியை இழந்திருக்கிறார். அவருக்கு எந்தப் பதவியும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, அளவுக்கு அதிகமாக அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய அமைச்சுகளை ஒதுக்குவதில் சிக்கலை எதிர்கொண்ட அரசுத் தலைமை இக்காரணத்தினால் போலும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் ஐவருக்கு தேசத்தைக் கட்டி எழுப்புதல் என்ற ஒரே அமைச்சை வழங்கியிருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ)

## புலிகள் பயிற்சிபெற்ற தமிழகப் பகுதிகளில் 'கியூ' பிரிவு பொலீஸார் தீவிர கண்காணிப்பு

மேட்டூர்,ஜன.29

விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் முன்னர் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதாகக் கருதப்படும் இடங்கள் எங்கிலும் 'கியூ' பிரிவுப் பொலீஸார் பாரிய தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுதம் தயாரிக்கப் பயன்படும் இரும்புக்குண்டுகளுடன் ஐந்து ஈழத்தமிழர்கள் சென்னையில் கைதான சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகள் தமிழகம் எங்கும் ஊடுருவியுள்ளனர் என்ற பேச்சு பரவலாக அடிபடுகிறது. இதனைத் தொடர்ந்தே 'கியூ' பிரிவுப் பொலீஸார் மேற்படி தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் குறித்த இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது என்றும் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். பதவி வகித்த காலத்தில் தமிழகத்தின் மேட்டூர், கௌத்தூர், கும்பராப்பட்டி ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் இரகசியமான வகையில் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது என்றும் -

தமிழகத்தில் புலிகள் தங்கியிருந்த காலத்தில் புலிகளுக்கு தமிழகத்தில வசிக்கும் முக்கிய புள்ளிகளுடன் தொடர்பு இருந்து என்றும் -

அந்த நட்பு - தொடர்பு - தற்பொழுதும் பேணப்பட்டு வருவதாகவும் 'கியூ' பிரிவுப் பொலீஸார் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே மேற்படி இடங்களையும், புலிகளுடன் தொடர்புவைத்திருக்கலாம் என்று சந்தேகப்படும் நபர்களையும் பொலீஸார் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர் என அறியமுடிந்தது.

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இன்று உதவும் நாடுகளின் மாநாடு

கொழும்பு,ஜன.29

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இன்று காலியில் ஆரம்பமாகின்றது. இன்றும் நாளையும் காலி லைட் ஹவுஸ் ஹோட்டலில் நடை பெறும் இந்த இருநாள் மாநாட்டில் இலங்கைக்கு உதவி வழங்கும் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டில் இலங்கையின் 10ஆண்டு அபிவிருத்தித் திட்டம் முன்வைக்கப்படும் என்றும் இம்மாநாட்டின் ஊடாக 150 கோடி அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டின் ஊடாக 150 கோடி அமெரிக்க டொலர் கிடைக்க இருப்பது உறுதியென்றாலும் 200 கோடி அமெரிக்க டொலரைப் பெறுவதே இலங்கை அரசின் திட்டம் என்று நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

## சங்கானையில் கிணற்றிலிருந்து ஒருவரின் சடலம் மீட்பு!

சங்கானை கரைச்சி மயானத்துக்கு செல்லும் வயல் வெளியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களாகக் காணாமற்போன சண்டிலிப்பாயைச் சேர்ந்த பாலசிங்கம் ஸ்ரீகாந்தன் என்பவரின் சடலமே அது எனச் சொல்லப்படுகிறது.

எனினும் சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும் - இன்று நீதிவான் விசாரணை நடந்த பின்னரே சடலத்தை அடையாளம் காணமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1-29)

## கந்தரோடையில் மீட்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது

சுன்னாகம், கந்தரோடையில் நேற்றுமுன் தினம் மாலை வெட்டிக் கொலை செய்யப் பட்ட இளைஞரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மல்லாகம், ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த முத்துக்குட்டி தேவபாலன் (வயது 33) என்ற ஒரு பிள்ளையின் தந்தையின் சடலம் என அடையாளம் காணப் பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-4-203)

## நாளை

தை - 16
செவ்வாய்க்கிழமை
30.01.2007
திதி: துவாதசி
பிற்பகல் : 12.20
நட்சத்திரம் : திருவாதிரை
பின்னிரவு : 06.17 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 - 05.06

## அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | - | பாதுகாப்பு, நிதித்துறை |
| ரட்ணசிறி விக்கிரமநாயக்க | - | பிரதமர், உள்நாட்டு நிர்வாகம் |
| அனுரா பண்டாரநாயக்கா | - | தேசிய பாரம்பரியம் |
| டி.எம்.ஜயரத்ன | - | பெருந்தோட்டத்துறை |
| நிமால் சிறிபால டி சில்வா | - | சுகாதாரம், போசாக்கு நலத்துறை |
| மங்கள சமரவீர | - | துறைமுகம் மற்றும் விமான சேவை |
| ஏ.எச்.எம்.பௌஸி | - | பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி |
| ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | - | வீதி அபிவிருத்தி மற்றும் பெருந்தெருக்கள் |
| மைத்திரிபால சிறிசேன | - | விவசாய அபிவிருத்தி, விவசாயிகள் மேம்பாட்டுத்துறை |
| ஆறுமுகம் தொண்டமான் | - | இளைஞர் சக்தி வளம், சமூக பொருளாதார அபிவிருத்தி |
| திஸ்ஸ விதாரண | - | விஞ்ஞான,தொழில்நுட்பவியல் |
| சுசில் பிரேம ஜயந்த | - | கல்வி |
| கரு ஜயசூரிய * | - | பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் |
| டக்ளஸ் தேவானந்தா | - | சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை |
| ரவூப் ஹக்கீம் | - | தபால், தொலைத்தொடர்பு |
| தினேஸ் குணவர்த்தன | - | நகர அபிவிருத்தி மற்றும் புனித பிரதேச அபிவிருத்தி |
| டி.யூ.குணசேகர | - | தேசிய நல்லிணக்கம், அரசமைப்பு விவகாரம் |
| ரிஷாத் பதியூதீன் | - | மீள்குடியேற்றம், அனர்த்த நிவாரண சேவைகள் |
| திருமதி சுமித்தா ஜியசேன | - | மகளிர் சக்தி வளம் மற்றும் சிறுவர் மேம்பாடு |
| கலாநிதி சரத் அமுனுகம | - | முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாரிய செயற்றிட்ட அபிவிருத்தி |
| மில்றோய் பெர்னாண்டோ | - | பொதுத் தோட்ட முகாமைத்துவமும் மேம்பாடும் |
| ஜீவன் குமாரதுங்க | - | காணி மற்றும் காணி அபிவிருத்தித்துறை |
| திருமதி பவித்திரா வன்னியாராய்ச்சி | - | இளைஞர் விவகாரம் |
| அனுர பிரியதர்ஷன யாப்பா | - | தகவல் மற்றும் ஊடகத்துறை |
| திஸ்ஸ கரலியத்த | - | சுதேசிய மருத்துவத்துறை |
| அதாவுட செனவிரத்தின | - | தொழில் உறவுகள் மற்றும் மனித வளம் |
| காமினி லொக்குகே * | - | விளையாட்டு மற்றும் பொது பொழுதுபோக்கு |
| பந்துல குணவர்த்தன * | - | வர்த்தகம், சந்தைப்படுத்தல் விருத்தி மற்றும் நுகர்வோர் விவகர்ரம் |
| மஹிந்த சமரசிங்க | - | மனித உரிமைகள், அனர்த்த முகாமைத்துவம் |
| ராஜித சேனாரத்ன * | - | பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை |
| மஹிந்த விஜயசேகர * | - | விசேட செயற்றிட்டம் |
| மிலிந்த மொறகொட * | - | உல்லாசப் பயணத்துறை |
| ஹெகலிய ரம்புக்வெல | - | வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி |
| பியசேன கமகே | - | பிரத்தியேக பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி |
| எஸ்.பி.றாவின்ன | - | கிராமிய தொழில்துறை மற்றும் சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு |
| ஜனக பண்டார தென்னக்கோன் | - | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் |
| பீலிக்ஸ் பெரேரா | - | மீன்பிடித்துறை மற்றும் மீனவவள அபிவிருத்தி |
| ஆர்.எம்.சி.பி.ரட்ணாயக்கா | - | கால்நடை அபிவிருத்தி |
| ரோஹித போகொல்லாகம | - | வெளிவிவகாரம் |
| மஹிந்த யாப்பா அபயவர்த்தன | - | கலாசார அலுவல்கள் |
| பேரியல் அஷ்ரப் | - | வீடமைப்பு மற்றும் இதர சேவைகள் |
| பி.சந்திரசேகரன் | - | சமூக அபிவிருத்தி மற்றும் சமூக சமத்துவ மேம்பாடு |
| ஏ.எல்.எம்.அதாவுல்லா | - | நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு |
| பி.தயாரட்ண * | - | திட்ட அமுலாக்கல் |
| ஆர்.எம்.தர்மதாஸ பண்டா * | - | நிவாரண, பயிர்ச்செய்கைத் துறை |
| எம்.எச்.முகமது * | - | நாடாளுமன்ற விவகாரம் |
| பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் * | - | ஏற்றுமதி விருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் |
| டபிள்யூ.டி.ஜெ.செனிவிரட்ண | - | சக்திவளம், எரிபொருள்துறை |
| பேராசிரியர் விஸ்வவர்ணபால | - | உயர்கல்வி |
| சமல் ராஜபக்ஷ | - | நீர் முகாமைத்துவம் |
| குமாரவெலிகம | - | கைத்தொழில் அபிவிருத்தி |
| டலஸ் அழகப்பெரும | - | போக்குவரத்து |

*. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரச தரப்புக்குத் தாவியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராய அதிகாரிகள் குழு இன்று வாகரைக்கு

ஏறாவூர்,ஜன.29

யுத்த அனர்த்தம் காரணமாக வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள மீள்குடியேற்ற அமைச்சின் நான்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக ஆராயவுள்ளனர். அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வாகரை அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த அதிகாரிகளை நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் நாயகம் காதர் முகைதீன் தலைமையில் புனர்வாழ்வு அதிகார சபைப் பணிப்பாளர் ஏ.மஹ்ரூப், மட்டக்களப்பு மேலதிக அரசஅதிபர் கே.மகேசன் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எஸ்.ஜெகநாதன் ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

வாகரை அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பான உயர்மட்ட மாநாடு இன்று மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரச அதிபர் எஸ்.அருமைநாயகம், பிரதேச செயலாளர், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேரடியாகச் சென்று வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பற்றியும் ஆராயவுள்ளனர். (த)

## உடைமைகளை மீட்க உதவுமாறு வாகரை மக்கள் சர்வமதக் குழுவிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன.29

வாகரைப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் தங்கியுள்ள மக்கள் தமது உடமைகளை மீட்க உதவுமாறு சர்வமதப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை திருமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். தமது பிள்ளைகளின் கல்விச் செயற் பாட்டுக்கு உதவுமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (அ-1-4)

## மன்னாரில் சனியன்று தாக்குதல் சம்பவம்

மன்னார் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் அமைந்துள்ள விசேட அதிரடிப் படையினரின் காவலரண் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. விசேட அதிரடிப் படையினரின் பதில் தாக்குதலை அடுத்து, அப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப்பு புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது எனவும்-

ரி-56 ரக துப்பாகி.மகசீன் ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டன- என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-12)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**சிவகுமார் - இந்திரா** தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**சிவதர்சன்**

யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி கற்று 2006 இல் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் மேலும் கல்வித்துறையில் சிறந்து விளங்க இறைவனை அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: அப்பா, அம்மா, அப்புச்சி, ரதி அம்மா, தங்கை சாலினி, ப.பசோதரன் (மாமா).

சி.இந்திரா (அம்மா)
121, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (57483)

குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் மலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவரும் கோண்டாவில் இந்து அன்னைக்கு பெரு நிழல் தரும் கோண்டாவில் நலன்புரி மன்றம் இலண்டன் என்ற அமைப்பின் தலைவரும், பாடசாலைக்கு சுய உதவி புரிந்து வருபவருமாகிய **ச.இராஜ்குமார்** அவர்களின் மூத்த அன்புச் சகோதரி **திருமதி சகுந்தலாதேவி அம்பிகானந்தன்** அவர்கள் இந்தியாவில் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திவேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்ப உறவுகட்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(57590) **பாடசாலைச் சமூகம்**, யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

### கண்ணீர் அஞ்சலி



காலஞ்சென்ற, கொக்குவில் கிராம சபைத் தலைவர் சி.க.சபாபதி, கனகலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் எமது சனசமூக நிலையத்திற்கு உதவி வரும் இலண்டன் கோண்டாவில் நலன்புரிச் சங்க தலைவர் **ச.இராஜ்குமார்** அவர்களின் அன்புச் சகோதரியுமான **திருமதி சகுந்தலாதேவி அம்பிகானந்தன்** அவர்கள் காலமான செய்திகேட்டு மனம் வருந்துவதுடன் அண்ணாரின் ஆத்ம சாந்தி வேண்டி நெட்டிலிப்பாய் விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது மன்றத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

(57591) **நிர்வாகசபை**, ஸ்ரீ மனோரா சனசமூக நிலையம், நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

## சர்வதேச சமூகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு ஒன்றுக்கான செயற்பாடு சாத்தியமாகும். அத்தகைய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கான தேவைகளை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்துவிட்டனர்.

அதற்கான அடிப்படை செயல் நிபந்தனைகள் 2002ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களைச் செயற்படுத்துவதற்கு கொழும்பு அரசாங்கத்துக்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அமைதியையும் பொறுமையையும் கடைப்பிடித்து வருகிறது.

கொழும்பு அரசாங்கம் அரசியல் தீர்வுக்கான செயற்பாட்டில் அர்த்தமுள்ள வகையில் மீள ஈடுபடுவதற்காகவே நாம் பொறுமை காத்தோம்.

இது விடயத்தில் நெகிழ்வுப் போக்கைக் கைக்கொள்ளுமாறு சர்வதேச சமூகம் விடுத்த வேண்டுகோளுக்கு நாம் மீண்டும் மீண்டும் - பல தடவைகள் - மதிப்பளித்தோம்.

'வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாட்டைக் குழப்பாமல் அரசியல் திருப்புமுனையை உண்டாக்கக் கூடிய வகையில் உழைக்குமாறு சர்வதேச சமூகம் இலங்கையின் அரசியல் தலைவர்களைக் கேட்டு வந்தது. இராணுவத் தீர்வு எந்த விதத்திலும் சாத்தியமானது அல்ல என்பதனையும் வலியுறுத்தி வந்தது.

ஆனால், கொழும்பு அரசாங்கமோ, சர்வகட்சி மாநாடு என்ற போர்வையைக் காட்டி தனக்கு அரசியல் லாபத்தைத் தேடிக் கொண்டது. தெற்கின் கட்சிகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு தனது நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்தியது.

இந்தியாவினால் உருவாக்கப்பட்ட "சர்வதேச ஒப்பந்தமான" வடக்கு - கிழக்கு இணைப்பை - 18வருடங்களாகநடைமுறையில் இருந்த இணைப்பை அரசியல் மயமாக்கப்பட்ட தனது நீதித் துறையை புத்திசாலித்தனமாக பயன்படுத்தி தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை நிராகரித்தது.

தமிழ் மக்கள் வரலாற்றுக்காலம் தொடக்கம் வாழ்ந்து வந்த பகுதிகளிலிருந்து அரசாங்கம் தனது இராணுவ் நடவடிக்கைகளால் அந்த மக்களை வெளியேற்றியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் அறிக்கைகளால் தமிழ் மக்களுக்கு எந்தவித பலனும் ஏற்படவில்லை.

இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்புகளிடமும் சர்வதேச சமூகம் இரு வேறுபட்ட அணுகுமுறைகளை கையாள்வது குறித்து தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தமிழர்களின் உரிமைகளையும் கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்காக சுயநிர்ணய உரிமைக்காக நீண்டகாலமாக அரசியல் போராட்டம் நடத்திவரும் நீண்ட சரித்திரத்தைக் கொண்ட விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகம் பாரபட்சமாக செயற்படுவது நியாயமற்றது என்று தமிழ் மக்கள் நோக்குகிறார்கள். - என்று சு.ப.தமிழ்ச்செல்வன் தமது செவ்வியில் தெரிவித்திருக்கிறார். (அ)

இந்தியாவில் உயர்கல்வி

மே மாதம் பெங்களூர் பல்கலைக்கழகம் செல்லவுள்ள மாணவர்களிற்கான ஆங்கில வகுப்புகள் 05.02.07 ஆம் திகதி இங்கு ஆரம்பமாகிறது. இதுவரை பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
(தகைமை A/L Pass)

Mrs.S.Tharani 077 9905694
கே.கே.எஸ்.றோட், குழப்பிட்டிச் சந்தி. (57560)

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போடுதல் போன்ற நடவடிக்கையில் அரசு ஈடுபட்டால் ஒப்பந்தம் கிழித்தெறி யப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இந்த ஒப்பந்தத்தை நாம் இப்போது கிழித்தெறிகின்றோம். எமது கட்சியை - நாம் அரசிற்கு வழங்கி வந்த ஆதரவை - மதிக்காத இந்த அரசுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இனியும் மதித்து நடக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை.

இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவது மாத்திரமன்றி அரசுடன் நாம் வைத்திருந்த எல்லாத் தொடர்புகளையும் இத்தோடு துண்டித்து விடுகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டன. ஏனைய இலக்கத் தொடர் தொலைபேசிகள் செயலிழந்தன.

'லீஸ் லைன்', 'இன்ர நெற்' தொடர்புகளுக்கான தொலைபேசிகளும் நேற்றுச் செயலிழந்திருந்தன.

இதன் காரணமாக குடாநாட்டுக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையிலான தொடர்புகளும் சர்வதேசத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.

தொலைபேசிச் சேவை தடங்கலுற்ற தால் வங்கிகள் ஊடாக தன்னியக்கி இயந் திரங்கள் (ATM)மூலம் பணம் பெறும் வசதி நேற் றுத் தடைப்பட்டது.

இதேவேளை - 'சன்ரெல்', 'மொபிட்டல்', 'டயலொக்' சேவைகள் வழமை போல் நேற்று இயங்கின. (அ-1)

## 104 அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிஜாமுதீன், மலையக மக்கள் முன்னணி யைச் சேர்ந்த இராதாகிருஷ்ணன் உட்பட 8பேர் இவ்வாறு அரசுக்கு ஆதரவாக உள்ளனர் என்று கூறப்படுகிறது.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

852 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம்
01 09 26 38
26.01.2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5686627 - 5701493

ஜக்பொட் பரிசு ரூபா. 2,487,100/- வெல்லப்பட்டுள்ளது.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 325,342 | 10/- | 3,253,420/- |
| 2 இலக்கங்கள் | 29,893 | 20/- | 597,860/- |
| 1 இல. + லக்கினம் | 29,589 | 30/- | 887,670/- |
| 2 இல. + லக்கினம் | 2,685 | 100/- | 268,500/- |
| 3 இலக்கங்கள் | 814 | 500/- | 407,000/- |
| 3 இல. + லக்கினம் | 60 | 5,000/- | 300,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,487,100/- | 2,487,100/- |
| மொத்தம் | | | 8,501,550/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 388,392 | | 9,525,050/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 4814892 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜனவரி 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5686658-4-68 |
| கொழும்பு | 5694727-0-35 |
| பதுளை | 5696839-9-41 |
| மாத்தளை | 5694874-8-32 |
| களுத்துறை | 5692640-2-58 |

### மரண அறிவித்தல்

#### கதிரிப்பிள்ளை மகாலிங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை மகாலிங்கம் நேற்று (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான கதிரிப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின்அன்பு மகனும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அமரர்களான கிருஸ்ணன்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பரதியின் அன்புக் கணவரும் கஜானனின் அன்புத் தந்தையும் கனகரத்தினம், கனகம்மா, தர்மகுலசிங்கம் (ஜெய துர்க்கா மோட்டோஸ்), தவமலர் (பிரான்ஸ்), ஈஸ்வரி (டென்மார்க்), மாலினி, விஜயாதேவி ஆகியோரின் சகோதரரும் புனிதவதி, சிவபாக்கியம், புஸ்பலதா, புஸ்பராணி, புஸ்பவதி (சுவிஸ்), புஸ்பரூபி (கோப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.07) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஏழாலை மேற்கு. (சி-51939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.